செ.வெ.எண்:51 நாள்-26.08.2021

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் குடும்பம் மற்றும் பொது இடங்களில் பெண்களுக்கு ஏற்படும் வன்முறைகளான வரதட்சணை கேட்டு துன்புறுத்துதல், பெண்களை அடித்து துன்புறுத்துதல், பெண்களை கட்டாய கருக்கலைப்பு செய்த துன்புறுத்துதல், பெண்களை கற்பழித்தல், பாலியல் ரீதியான துன்புறுத்தல், பெண்களை கேலி கிண்டல் செய்தல், பெண்களை தவறாக சித்தரித்து தற்கொலைக்கு தூண்டுதல், பெண்களை கொத்தடிமையாக வைத்து துன்புறுத்துதல், பெண்களை கடத்தி கட்டாய திருமணம் செய்தல் போன்ற வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு தேவைப்படும் அவசரகால மீட்பு தற்காலிக தங்கும் உதவி, மருத்துவ உதவி, மனநல ஆலோசனை, காவல் உதவி மற்றும் சட்ட உதவி ஆகியவற்றை வழங்கி அவர்களை பாதுகாக்க சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் "சகி" ஒருங்கிணைந்த சேவை மையம் (OSC) 24 மணிநேரமும் 365 நாட்களும் செயல்பட்டு வருகின்றது.

மேலும், விபரங்களுக்கு "சகி"- ஒருங்கிணைந்த சேவை மையம் (OSC), மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை வளாகம், அரியலூர்-621704 என்ற முகவரியிலும், 04329 220230, மகளிர் உதவி எண் : 181 என்ற கட்டணமில்லா சேவையிலும் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**